விடுநர்:

க.வேலு,

மூன்றாம் நிலை கிளை நூலகர்,

மாவட்டக் கிளை நூலகம்,

சோளிங்கர்.631 102

இராணிப்பேட்டை மாவட்டம்.

பெறுநர்:

**உயர்திரு. உதவி இயக்குநர் அவர்கள்,**

புவியியல் மற்றும் சுரங்கத்துறை,

இராணிப்பேட்டை–632 403

இராணிப்பேட்டை மாவட்டம்.

மதிப்பிற்குரிய அய்யா,

பொருள்: இராணிப்பேட்டை மாவட்டம் – மாவட்டக் கிளை நூலகம் சோளிங்கர். **புவியியல் மற்றும் சுரங்கத்துறை வழங்கியுள்ள நிதியுதவியுடன் 2020–2021ஆம் நிதியாண்டில்** கட்டப்பட்டுள்ள புதிய நூலக கட்டடம் – பயன்பாடு விவரம் தெரிவித்தல் சார்ந்து.

**********************

சோளிங்கர் கிளை நூலகமானது கடந்த 1963 ஆம் ஆண்டு முதல் சுமார் 58 ஆண்டுகளாக சோளிங்கர் நகரில் வாடகைக் கட்டடத்தில் மேல்மாடியில் இயங்கி வந்தது. இது மிகவும் பழுதடைந்த பழைய கட்டடம் ஆகும். மேல்மாடியில் இருப்பதால், முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நூலகத்தை பயன்படுத்துவது சிரமாக இருந்து வந்தது.

சோளிங்கர் கிளை நூலகத்தில் 6426 நூலக உறுப்பினர்களும், 112 புரவலர்களும் உறுப்பினராக உள்ளனர். சுமார் 39,685 நூல்கள் இக்கிளை நூலகத்தில் பயன்பாட்டில் உள்ளது. நாள்தோறும் சுமார் 120 முதல் 160 வாசகர்கள் வரை இந்நூலகத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர். தற்போதைய வாசகர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்த புதிய கட்டடம் போதுமானதாக உள்ளது.

ஊர்ப் பொதுமக்களின் நலன் கருதி சோளிங்கர் கிளை நூலகத்திற்கு, **புவியியல் மற்றும் சுரங்கத்துறை வழங்கியுள்ள நிதியுதவியுடன் 2020–2021ஆம் நிதியாண்டில்** கட்டப்பட்டுள்ள புதிய நூலகக் கட்டடம் தரைதளத்தில் சொந்தமானதாக உள்ளது.

ஆதலால், ஊர்ப் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள், முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் அதிக அளவில் இந்நூலகத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர் என்ற விவரத்தினை இதன் மூலம் தங்களுக்கு சோளிங்கர் கிளை நூலகத்தின் சார்பாகவும், ஊர்ப் பொதுமக்கள் சார்பாகவும் நன்றியை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம் : சோளிங்கர்

தங்கள் உண்மையுள்ள,

24/12/2024

நாள் : **24.12.2024**

மூன்றாம் நிலை நூலகர்
மாவட்டக் கிளை நூலகம்
சோளிங்கர்- 631 102.
இராணிப்பேட்டை மாவட்டம்.

நகல்:

உயர்திரு மாவட்ட நூலக அலுவலர், இராணிப்பேட்டை அவர்களுக்குப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அனுப்புநர் :

த. வேல்முருகன், M.A,
No. 37, போர்டுன் பேட்டை தெரு,
சோளிங்கர் - 631102
ராணிப்பேட்டை மாவட்டம்.

பெறுநர் :

உயர்திரு. துணை இயக்குனர் அவர்கள்,
புவியியல் மற்றும் சுரங்கத்துறை,
இராணிப்பேட்டை - 632 403,
இராணிப்பேட்டை மாவட்டம்.

பொருள் : புவியியல் மற்றும் சுரங்கத்துறை நிதியுதவியுடன் (2020-21) கட்டப்பட்டுள்ள நூலக கட்டடத்தின் பயன்பாடு குறித்து கருத்து தெரிவித்தல்.

ஐயா,

வணக்கம். சோளிங்கர் கிளை நூலகமானது கடந்த 60 ஆண்டுகளாக போதுமான இடவசதி இல்லாமல் மேல் தளத்தில் வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது.

தற்போது புவியியல் மற்றும் சுரங்கத்துறை மூலமாக 2020-21 ம் ஆண்டு ரூபாய். 32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நூலக கட்டடமானது போதுமான இடவசதியோடு, காற்றோட்டமான சூழ்நிலையில் அமர்ந்து படிக்கும் நிலையில் நன்றாக உள்ளது.

மேலும் கீழ்தளத்தில் செயல்படுவது முதியோர், மாற்றுத்திறனாளிகள் படிக்க நூலகமானது பயனுள்ளதாக உள்ளது.

(P.T.O)

வாசகர் என்ற முறையில் நூலக கட்டடம் அமைத்து கொடுத்த புரவலர் மற்றும் சுரங்கத் துறைக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்

இப்படிக்கு,
உண்மையுள்ள,
கு. வேல்முருகன்.